சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

Case No.OS. 66/2015

2026ம் ஆண்டு ஜனவரி மாதம் 19ம் நாள் திங்கட்கிழமை

பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய **பி.வா.சா.1**-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி.ஆர்.இளவரசி, எழுத்தர் நிலை-2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வேலு | தொழில் | விவசாய கூலி |
| தந்தை பெயர் | லேட். கண்ணன் | ஜாதி | |
| கிராமம் | அக்ராபாளையம் | சமயம் | |
| தாலுக்கா | ஆரணி | வயது | 49 |

**19.01.2026 முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் பிரதிவாதி ஆவேன். என் ஆதார் அட்டை நகல் தாக்கல் செய்கிறேன். ஆதார் அட்டை நகல் அசல் ஆவணத்துடன் சரிபார்க்கப்பட்டது. வழக்கு பற்றிய முழு விவரம் எனக்குத் தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என் தரப்பு சான்றாவணங்களாக, 03.05.2003 தேதியிட்ட உடன்படிக்கை ஒப்பந்தம் அசல் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 09.06.2003 தேதியிட்ட ரூ.50,000/-ற்கு வைக்கப்பட்ட செல் **பி.வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 07.08.2003 தேதியிட்ட அடமான ஒப்பந்த முச்சிலிக்கா **பி.வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (வாதி தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.) வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.